பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**16 02 2026** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மத்திய அரசின் சீர்திருத்த நடவடிக்கைகள் சாதாரண குடிமக்களுக்கு மிகப்பெரிய அளவில் பயனளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. அசாம் மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முன்னேற்பாடுகளை ஆய்வு செய்ய தலைமைத் தேர்தல் ஆணையர் தலைமையிலான குழு இன்று குவஹாத்தி செல்கிறது.

3. குஜராத் மாநில சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர், காந்திநகரில் இன்று தொடங்குகிறது.

4. இந்திய பெருங்கடலில் வெனிசுலாவுடன் தொடர்புடைய மற்றொரு எண்ணெய்க் கப்பலை அமெரிக்கப் படைகள் சிறைபிடித்தன.

5. ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் பெங்களூரு அணி **2-0** என்ற கோல் கணக்கில் தில்லி அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மத்திய அரசின் சீர்திருத்த நடவடிக்கைகள் சாதாரண குடிமக்களுக்கு மிகப்பெரிய அளவில் பயனளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், அதிகப்படியான கட்டமைப்பு சீர்திருத்தங்கள், தீவிரமான கண்டுபிடிப்புகள் மற்றும் எளிமையான நிர்வாகம் ஆகியவற்றுக்கு அடுத்த பத்தாண்டுகளில் முன்னுரிமை அளிக்க அரசு முடிவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் மத்திய பட்ஜெட், நாட்டை வளர்ச்சியடைந்த நாடாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தை பிரதிபலிப்பதாக அவர் கூறினார்.

ஆபரேஷன் சிந்தூர் நிகழ்வின்போது கடந்த பத்தாண்டுகால பாதுகாப்பு சீர்திருத்தங்களின் பலன்கள் தெளிவாகத் தெரிந்தன என்பதைச் சுட்டிக்காட்டிய அவர், பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ள இந்தியா எப்போதும் தயாராக இருக்க வேண்டும் என்றார்.

2026-27 மத்திய பட்ஜெட்டில் பாதுகாப்புத் துறைக்கு 7 புள்ளி எட்டு ஐந்து லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதைக் குறிப்பிட்ட பிரதமர், இது முந்தைய பட்ஜெட்டை விட 15 சதவீதம் அதிகம் என்று கூறினார்.

<<<<>>>>

அசாம் மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முன்னேற்பாடுகளை ஆய்வு செய்ய தலைமைத் தேர்தல் ஆணையர் தலைமையிலான குழு இன்று குவஹாத்தி செல்கிறது.

தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் தலைமையிலான குழுவில் தேர்தல் ஆணையர்களான திரு. எஸ்.எஸ். சாந்து மற்றும் திரு. விவேக் ஜோஷி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

தங்களது மூன்று நாள் பயணத்தின் போது, இக்குழுவினர் மாநில அரசின் மூத்த அதிகாரிகள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் விரிவான ஆலோசனைக் கூட்டங்களை நடத்த உள்ளனர்.

மாநிலத்தின் தேர்தல் தயார் நிலை குறித்து இக்கூட்டங்களில் விரிவாக ஆய்வு செய்யப்பட உள்ளது.

<<<<>>>>

மேற்குவங்கத்தில் பல்வேறு முறைகேடு புகார்கள் எழுந்ததைத் தொடர்ந்து, ஏழு உதவி தேர்தல் பதிவு அதிகாரிகளுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதில் கேனிங் பூர்பா தொகுதியைச் சேர்ந்த இருவரும், சுதி, மயனாகுரி, சம்ஷேர்கஞ்ச், டெப்ரா மற்றும் ஃபரக்கா ஆகிய தொகுதிகளைச் சேர்ந்த தலா ஒரு அதிகாரியும் அடங்குவர்.

இது தொடர்பாக மாநில தலைமைச் செயலாளர் திருமதி. நந்தினி சக்ரவர்த்திக்கு தேர்தல் ஆணையம் நேற்று கடிதம் அனுப்பியுள்ளது.

வாக்காளர் பட்டியில் சிறப்பு திருத்தின் போது இந்த அதிகாரிகள் விதிகளுக்கு புறம்பாக நடந்து கொண்டதாகவும், பணியில் அலட்சியம் மற்றும் சட்டப்பூர்வ அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியது போன்ற செயல்களில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, அவர்களை உடனடியாகப் பணி இடைநீக்கம் செய்யவும், அவர்கள் மீது ஒழுங்குமுறை விசாரணை நடத்தவும் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இது குறித்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து விசாரணையைத் தொடங்கி, தேர்தல் ஆணையத்திடம் அறிக்கை சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

குஜராத் மாநில சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர், காந்திநகரில் இன்று தொடங்குகிறது.

இந்த ஆண்டின் முதல் கூட்டத்தொடர் என்பதால் மாநில ஆளுநர் திரு. ஆச்சார்ய தேவ்வரத் பேரவையில் உரையாற்றுகிறார்.

இதனைத் தொடர்ந்து, வரும் 18-ஆம் தேதி 2026-27 நிதியாண்டிற்கான மாநில பட்ஜெட்டை நிதியமைச்சர் திரு. கனுபாய் தேசாய் தாக்கல் செய்ய உள்ளார்.

மார்ச் 25-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இக்கூட்டத்தொடரின் போது, சட்டப்பேரவைக்கான புதிய துணைத்தலைவர் தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்.

மேலும், மாநிலத்தின் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவது உள்ளிட்ட பல முக்கிய மசோதாக்களும் இந்தத் தொடரில் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

<<<<>>>>

ஹிமாச்சலப்பிரதேச சட்டப்பேரவையில் நாளை மாநில அளுநர் திரு. சிவ பிரதாப் சுக்லா உரையாற்ற உள்ளதாகச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. குல்தீப் சிங் பதானியா தெரிவித்துள்ளார்.

சிம்லாவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த கூட்டத்தொடர் மூன்று நாட்களுக்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், தேவைப்பட்டால் நீட்டிக்கப்படலாம் என்றும் கூறினார்.

<<<<>>>>

மைக்ரோசாப்ட் நிறுவனர் திரு. பில் கேட்ஸ் இன்று அமராவதிக்கு வருகை தந்து, ஆந்திர முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடு உடன் சுகாதாரம் மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த திட்டங்களில் ஒத்துழைப்பை விரிவாக்குவது குறித்து ஆலோசனை நடத்தவுள்ளார்.

திரு. பில்கேட்ஸ் இன்று காலை மாநிலத் தலைமைச் செயலகத்திற்கு வருகை தரவுள்ளதாகவும், முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடு, துணை முதல்வர் திரு. பவன் கல்யாண், தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. நாரா லோகேஷ் ஆகியோரைச் சந்திப்பார் என்று அம்மாநில அமைச்சர் திரு. பி. நாராயணா தெரிவித்துள்ளார்.

பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை ஏற்கனவே சித்தூர் மாவட்டத்தின் குப்பம் பகுதியில் உடல்நலம் சார்ந்த திட்டங்களில் பணியாற்றி வருகிறது.

இந்த ஆலோசனையின் மூலம் அத்தகைய திட்டங்களை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்துவது குறித்து விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

இந்திய ராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் திரு. உபேந்திர திவேதி, நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று ஆஸ்திரேலியா செல்கிறார்.

இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதையும், இரு நாடுகளுக்கும் இடையே வளர்ந்து வரும் இணக்கத்தை உறுதிப்படுத்துவதையும் இந்தப் பயணம் நோக்கமாகக் கொண்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தனது இந்தப் பயணத்தின் போது, ஆஸ்திரேலியப் பாதுகாப்புப் படையின் மூத்த தலைவர்களுடன் ராணுவத் தலைமைத் தளபதி விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளார்.

இதில் இரு நாட்டு ராணுவங்களுக்கு இடையிலான பயிற்சி, கூட்டுப் பயிற்சிகள், தொழில்முறைப் பரிமாற்றங்கள் மற்றும் திறன்

மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது.

<<<<>>>>

ஜம்மு காஷ்மீரில் பதேர்வா-பதான்கோட் இடையேயான மாநிலங்களுக்கு இடையேயான நெடுஞ்சாலையில் உள்ள குல்தண்டா பகுதியில் நேற்று ஏற்பட்ட பனிச்சரிவு காரணமாக வாகனப்போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சுமார் 40 வாகனங்கள் பனிகுவியலில் சிக்கியது. உடனே எல்லை சாலைகள் அமைப்பினர் வந்து சாலையைச் சீரமைத்தனர்.

பனிச்சரிவில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் பதேர்வா நிர்வாக அதிகாரி திரு. கமல் பிரீத் சிங் கூறினார்.

தற்போது சாலை சீரமைக்கப்பட்டுவிட்டதால் போக்குவரத்து இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

இந்திய பெருங்கடலில் வெனிசுலாவுடன் தொடர்புடைய மற்றொரு எண்ணெய்க் கப்பலை அமெரிக்கப் படைகள் சிறைபிடித்தன.

வெரோனிகா-3 என்று பெயரிடப்பட்ட அந்தக் கப்பலை கரீபியன் கடலில் இருந்து இந்தியப் பெருங்கடல் வரை அமெரிக்கப் படையினர்

பின்தொடர்ந்து கண்காணித்து வந்ததாகவும், பின்னர் அதைத் தடுத்து நிறுத்தி சோதனையிட்டதாகவும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் அகிலா-2 என்ற வெனிசுலாவுடன் தொடர்புடைய மற்றொரு எண்ணெய்க் கப்பலை அமெரிக்க ராணுவம் கரீபியன் கடலில் இருந்து துரத்திச் சென்று இந்திய பெருங்கடல் பகுதியில் சிறை பிடித்தது.

அமெரிக்காவின் பொருளாதார தடைகளுக்கு ஆளாகியுள்ள வெனிசுலாவிற்கு செல்லும், அல்லது அங்கிருந்து வரும் கப்பல்களை முழுமையாக தடுக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கடந்த டிசம்பர் மாதம் உத்தரவிட்டிருந்தார்.

<<<<>>>>

அமெரிக்காவுடன் நாளை நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட அணுசக்தி பேச்சுவார்த்தையில் பங்கேற்பதற்காக, ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு. அப்பாஸ் அராக்சி மற்றும் அவரது குழுவினர் சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகருக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

இந்தப் பயணத்தின் போது, திரு. அப்பாஸ் அராக்சி சுவிட்சர்லாந்து மற்றும் ஓமன் நாட்டு வெளியுறவு அமைச்சர்களையும்,

ஐநா சபையின் சர்வதேச அணுசக்தி முகமையின் தலைமை இயக்குநரையும் சந்தித்துப் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் தெஹ்ரானுடனான கருத்து வேறுபாடுகளை முடிவுக்குக் கொண்டு வர தூதரக ரீதியிலான தீர்வில் வாஷிங்டன் ஆர்வமாக இருப்பதாக அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலர் திரு. மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

இதற்காக அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தூதர்களான திரு. ஸ்டீவ் விட்காஃப் மற்றும் திரு. ஜாரெட் குஷ்னர் ஆகியோர் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்பார்கள் என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் பெங்களூரு அணி 2-0 என்ற கோல் கணக்கில் தில்லி அணியை வென்றது.

பெங்களூருவில் நடைபெற்ற இப்போட்டியில் பெங்களூரு அணி தரப்பில் சிவசக்தி, சுனில் சேத்தி ஆகியோர் கோல் அடித்தனர்.

முன்னதாக ஜம்ஷெட்பூரில் நடைபெற்ற ஆட்டத்தில் ஜம்ஷெட்பூர் அணி 1-0 என்ற கோல் கணக்கில் முகமதன் அணியை வென்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி - ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.

-------------

உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 61 ரன் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

கொழும்புவில் நேற்று நடைபெற்ற போட்டியில் முதலில் விளையாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 175 ரன் எடுத்தது.

துவக்க ஆட்டக்காரர் இஷான் கிஷன் 40 பந்துகளில் 77 ரன் எடுத்தார்.

176 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பாகிஸ்தான் 18 ஓவரில் 114 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்தியா தரப்பில் ஹர்திக் பாண்ட்யா, ஜஸ்பிரித் பும்ரா, அக்ஷர் படேல், வருண் சக்கரவர்த்தி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், குல்தீப் யாதவ், திலக் வர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்திய அணியினர் ஒருங்கிணைந்து சிறப்பாக செயல்பட்டதால் சிறப்பான வெற்றியை அடைய முடிந்ததாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா பாராட்டியுள்ளார்.

**<<<<The End>>>>**